THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 9th August 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Drinking water wells for Javadu Hill Tribes

*31 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959-60-ம் ஆண்டில் ஜவ்வாது மலைவாசிகளுக்கு போளூர் தாலூகாவில் எத்தனை கிராமங்களில் ஹரிஜன நல இலாகாவினால் குடி தண்ணீர் கிணறுகள் வெட்டித் தரப்பட்டன?

(ஆ) 1960-61-ம் ஆண்டில் எத்தனை கிணறுகள் வெட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன?

THE HON. SRI P. KAKKAN : (அ) Eight villages.

(ஆ) The programme has not yet been finalised by the Collector as he is still awaiting replies from the subordinate officials.

SRI S. M. ANNAMALAI : அங்கே சமுதாய நல திட்டம் இருந்தது. இப்போது பஞ்சாயத்து யூனியன் ஆரம்பிக்கும் நிலையில் இருக்கிறது. அதுவரையில் போளூர் தாலூகாவிலுள்ள ஜவ்வாது மலையில் கிணறுகள் வெட்டாமல் செங்கம், திருப்பத்தூர் தாலூகாக்களில் உள்ள ஜவ்வாது மலையில் கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள். ஆகையால் கலெக்டர் அவர்களுடைய லிஸ்டைப் பரிசீலனை செய்து அங்கே அதிகமான கிணறுகள் எடுக்க முன் வருவார்களா?

THE HON. SRI P. KAKKAN : முன்பு அங்கே எட்டு கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள். 1960-61-ம் ஆண்டுக்கு 19 ஆயிரம் ரூபாய் சாங்க்ஷன் ஆகியிருக்கிறது. இது போளூரில் உள்ள ஜவ்வாது மலையில் கிணறு வெட்டுவதற்காகவா அல்லது செங்கம் திருப்பத்தூரிலுள்ள ஜவ்வாது மலையில் கிணறு வெட்டுவதற்காகவா என்று தெரியாது. ஆதிவாசிகள் எங்கெங்கே இருக்கிறார்களோ அங்கங்கே அவர்களுடைய நலனுக்காகத்தான் கிணறுகள் வெட்டுகிறார்கள்.

SRI S. M. ANNAMALAI : சர்க்கார் ஒதுக்கியிருக்கிற பணம் செங்கம் தாலூகாவில் உள்ள ஜவ்வாது மலைப்பகுதிக்குத்தான் செலவிடப்படுகிறதேயொழிய போளூர் தாலூகாவில் இருக்கும்

[9th August 1960

ஜவ்வாது மலைப்பகுதிக்குச் செலவிடப்படவில்லை. ஆகையால் கலெக்டரிடம் சொல்லி இந்தப் பகுதிக்கும் அந்தப் பணத்தைச் செலவழிக்க உத்தரவு போடுவார்களா?

THE HON. SRI P. KAKKAN : எந்தப் பகுதியிலே செலவழித்தாலும் அது அங்குள்ள ஆதிவாசி மக்களுக்குத்தான் உபயோகப்படுகின்றது. கனம் அங்கத்தினர் சொன்னபிரகாரம் உண்மையிலே போளூர் தாலூகாவில் உள்ள ஜவ்வாது மலைப் பகுதியில் கிணறுகள் வெட்டவில்லையென்றால் அங்கே கிணறுகள் வெட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

House-sites for Harijans

*32 Q.—SRI M. A. B. ARUMUGHASAMY : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, திண்டுக்கல் தாலூகா, அய்யம்பாளையத்தில் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்கு வாங்கிய நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் என்றால், எத்தனை பேர்களுக்கு?

THE HON. SRI P. KAKKAN : (அ) Yes, Sir.

(ஆ) 44 persons.

SRI M. A. B. ARUMUGHASAMY : கொடுக்கப்பட்ட மனைகளில் ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொண்டார்களா? அப்படி வீடுகள் கட்டிக் கொள்ளாவிட்டால் அதன் காரணம் என்ன?

THE HON. SRI P. KAKKAN : அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள மனைகள் கொடுக்கப்பட்டன. வீடுகள் கட்டினார்களா இல்லையா என்பது அவர்களுடைய பிரச்னை.

SRI V. K. KOTHANDARAMAN : ஹரிஜனங்கள் வீடு கட்டிக் கொள்ள மனைகள் வேண்டுமென்று எழுதி பல வருஷங்கள் ஆகியும் கிடைக்காத நிலைமையில் இருக்கிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியானால் குறைந்த பட்சம் ஒரு வருஷத்திற்குள்ளாவது வீட்டு மனைகளை கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI P. KAKKAN : மனைக்கட்டுகள் கொடுப்பதற்கு எங்கெல்லாம் துரிதமான நடவடிக்கை எடுக்க முடியுமோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம், நிலச்சொந்தக்காரர்கள் சில சமயங்களில் கோர்ட்டுக்குச்சென்று வழக்காடுவதனால்தான். மற்றபடி காலதாமதம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.